Registered as a Newspaper in Sri Lanka பக்கங்கள் 04 விலை ரூபா 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples' Daily மக்கள் தினசரி

நாதம் 02 ஏப்ரல் (15 04 1991) திங்கட்கிழமை ஓசை : 56

## குழந்தை விற்பனை தடை; தத்தெடுக்க சட்ட திருத்தம்

(கொழும்பு)

குழந்தைகளை விற்பனை செய்யும் நடவடிக்கைகளைத் தடுப்பதற்காக குழந்தைகளைத் தத்தெடுப்பதற்கான பழைய சட்டம் திருத்தி அமைக்கப்படும் என்று பாராளுமன்ற விவகார உயர் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

ஏழை மற்றும் திருமணமாகாத தாய்மார்களின் பச்சிளம் குழந்தைகளை (4ஆம் பக்கம் பார்க்க)

## ஓமந்தையில் வீடு முற்றாகச் சேதம்

(வவுனியா)

ஓமந்தை அரசன்குளம் பகுதியில் சிறிலங்கா விமானப் படை விமானங்கள் குண்டு வீச்சு நடாத்தியதில் சுமார் ஒன்றரை இலட்சம் ரூபா பெறுமதி மிக்க வீடொன்று முற்றாகச் சேதமடைந்தது இக்குண்டுவீச்சின் போது ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

## தன்னைக் காயப்படுத்திய மனநோயாளி

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாயைச் சேர்ந்த செ. ஞானச்சந்திரன் என்பவர் தனது நஞ்சில் காயினைகளை ஆயுதம் ஒன்றினால் குத்திக் காயம் ஏற்படுத்திக் கொண்டார். நேற்றுக்காலை ஒன்பது மணியளவில் வீட்டில் இடம்பெற்ற இச்சம்பவத்தைத் தொடர்ந்து அவர் இந்தச் செயலில் இறங்கினார்.

மனநோயாளியான இவர் முன்பும் பலமுறை தாம் கத்தியால் வயிற்றில் ஏற்றியுள்ளதாகவும் கூறினார். (லோ)

## தமிழகத் தேர்தல் செலவீடு 15 கோடி ரூபா

(சென்னை)

தமிழகத்தில் தேர்தல் செலவு 15 கோடி ரூபாவாக இருக்கும் என்று தமிழகத் தேர்தல் தலைமை அதிகாரி எம் ரகுபதி தெரிவித்தார். சென்ற தேர்தலைக் காட்டிலும் 2 கோடி ரூபாய் அதிகரித்திருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# சர்வதேச செஞ்சிலுவை அமைத்த அகதிகள் குடியிருப்பு மீது நாயாற்றில் குண்டுவீச்சு

## ஒரே குடும்பத்தில் நால்வர் பலி

(மணலாறு)

திருமலை மாவட்ட தமிழ் அகதிகளுக்கென நாயாற்றில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அமைத்துக் கொடுத்த குடியிருப்புக்கள் மீதும், குமுழமுனை மீதும் சிறிலங்கா விமானப்படை விமானம் நேற்று முன்தினம் குண்டுகளை வீசியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் கொல்லப்பட்டனர், ஒன்பது பேர் காயமடைந்தனர்.

இவ்விமானத் தாக்குதல் தொடர்பாகத் தெரியவருவதாவது; மணலாறு மாவட்டத்தைச்சேர்ந்த நாயாறு பகுதியில் திருமலையில் இருந்து வந்த தமிழ் அகதிகளுக்கென சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அமைத்துக்கொடுத்த குடியிருப்புப் பகுதிகள் மீதும், குமுழமுனைமீதும் சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான அவ்ரோ விமானம் ஒன்று தாக்குதலை நடாத்தியது. இத்தாக்குதல் மாலை 5.30 மணியளவில் இடம்பெற்றது.

இந்தக் குண்டுவீச்சுத் தாக்குதலில் ஒரு தாயும் மூன்று பிள்ளைகளும் கொல்லப்பட்டார்கள். சண்முகலிங்கம் பரமேஸ்வரி 38, ச யாழினி 10), ச. தயாராசன் (08) ஜீவராசா (05) ஆகியோரே கொல்லப்பட்டவர்களாவர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் உட்பட ஒன்பது பேர் காயமடைந்தனர். மூ. விமலராசா (40), விமலராசா சிறிதேவி 38. வி தயாபரன் (08), வி. சிறிதரன் (06), வி. சிறிவதனன் (04 ஆகியோரே காயமடைந்த ஒரேகுடும்பத்தைச் சேர்ந்தவர்களாவர். விசுவநாசநாதன் (17), மார்க்கண்டு விஜயகுமாரி (25), மா. நிவாசினி (04). இராசமணி காஞ்சனா (03) ஆகியோரே ஏனைய காயமடைந்தவர்களாவர்.

## ஆலயடிவேம்பில் 3 தமிழர் அதிரடிப்படையால் கொலை

(அம்பாறை)

அக்கரைப்பற்றுப் பகுதிக்கு சமீபமாகவுள்ள ஆலயடி வேம்பு பகுதியை சுற்றிவளைத்த விசேட அதிரடிப்படையினர் மூன்று தமிழர்களை சுட்டுக்கொன்றுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் கண்ணன் என்பவரும் மற்றும் இரு பொதுமக்களும் உயிரிழந்துள்ளனர் இந்தச் சம்பவம் கடந்த வெள்ளியன்று நண்பகலில் இடம்பெற்றுள்ளது.

## மறைந்திருந்த ராணுவம் மீது புலிகள் திடீர்த் தாக்குதல்

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள மங்கிபிறிட்ஜ் (குரங்குப்பாலம்) மற்றும் 5ஆம் கட்டை ஆகிய இரு சிறிலங்கா இராணுவ முகாம்களுக்கு இடையிலுள்ள விளாத்திக்குளம்பகுதியில் விடுதலைப் புலிகளைத் தாக்க புலிகள்மீது தாக்குவதற்காக காத்து மறைந்திருந்த இராணுவத்தினர்மீது விடுதலைப் புலிகள் நேற்றுமுன்தினம் இரவு எட்டு மணியளவில் திடீர்தாக்குதலை மேற்கொண்டனர். இத்தாக்குதலில் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேத விபரம் தெரியவரவில்லை.

# தற்காலிக போர் நிறுத்தத்தை அரசாங்கம் விரும்பவில்லை

– பிரட்மன் வீரக்கோன்

(கொழும்பு)

வடக்கு கிழக்கில் நிரந்தரமான ஒரு சமாதானத் தீர்வை ஏற்படுத்தவே அரசாங்கம் விரும்புகிறது ஆதனால்தான் தற்காலிக போர் நிறுத்தமொன்றை கொண்டுவர விரும்பவில்லை என்று சிறிலங்கா ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார்

நேற்று முன்தினம் கொழும்புப் பத்திரிகையொன்றுக்கு பேட்டியளித்த பிரட்மன்வீரக்கோன். போர் நிறுத்தம் சமாதான தீர்வு ஏற்படும் சூழ்நிலையிலேயே பிரகடனப் படுத்தப்படும் என்றும் தற்காலிக போர் நிறுத்தம் அறிவிக்கப்படாது என்றும் கூறினார்.

இதே நேரம், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கான அரசியல் நிபந்தனைகளிலும் மாற்றம் எதுவும் இல்லை எனவும் பிரட்மன் கூறினார்.

## உத்தியோகத்தர்கள் ஜூன் 30க்குள் சொத்தை பகிரங்கப் படுத்த வேண்டும்

(கொழும்பு)

1989 ஆம் ஆண்டு சொத்து வெளியிடுதல் தொடர்பான சட்டத்தின் கீழ் வரும் சகல உத்தியோகத்தர்களும் 1991 ஆம் ஆண்டுக்கான தங்களது சொத்து விபரங்களை எதிர் வரும் ஜூன் 30 ஆம் திகதிக்கு முன் பிரகடனப்படுத்தவேண்டும்.

பத்திரிகையாளர், பத்திரிகை ஆசிரியர்கள், தொழிற்சங்க வாதிகள், அரசாங்க அதிகாரிகள். பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரே தமது சொத்துக்கள் பற்றிய விபரங்களை வெளியிட வேண்டியவர்களாவர்.

## ஷெல் தாக்கு

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவமுகாமில் இருந்து நேற்று முன் தினம் பத்துமணியளவில் வல்லைப் பகுதியைநோக்கி ஏழு ஆட்லறி ஷெல்கள் ஏவப்பட்டன. இச் ஷெல்கள் வல்லை நெசவு சாலைக்கு அருகாமையில் வெடிக்காத நிலையில் புதைந்து காணப்பட்டன.

## ஆசிரியர் இடமாற்றங்களை உடன் நிறுத்தப் பணிப்பு

(கொழும்பு)

ஆசிரிய இடமாற்றங்கள் அனைத்தையும் உடனடியாக நிறுத்துமாறு கல்வி உயர்கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இடமாற்றங்களை முறையாக நடைமுறைப்படுத்துவதற்கான ஒரு திட்டம் அமுலாக்கப்படவிருப்பதால் உயர்கல்வி அமைச்சரின் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக கல்வி ஆணைக்குழுவின் செயலாளர் ஏ எஸ். வீரரத்தின தெரிவித்துள்ளார்.

## மீண்டும் சம்பள முற்பணம் வழங்கப் பணிப்பு

(கொழும்பு)

வன்செயல்களால் பாதிப்புக்குள்ளாகிய ஆசிரியர்களுக்கும் கல்வித் திணைக்கள ஊழியர்களுக்கும் வழங்கப்பட்ட சம்பள முற்பணம் வடக்கிலும், கிழக்கிலும் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. இதை மீளவும் வழங்கும்படி கல்வி அமைச்சு வடக்கில் உள்ள கல்விப்பணிப்பாளர்களை பணித்துள்ளது; கிழக்கிற்கும் இந்தப்பணிப்புரை செல்லுபடியாகும்.

## குடாநாடு எங்கும் அமைதியான புத்தாண்டு

(நமது நிருபர்)

குடாநாட்டுப் பகுதியெங்கும் புத்தாண்டு தினம் அமைதியான முறையில் நடைபெற்றுள்ளது. புதுவருட தினத்தை முன்னிட்டு ஆலயங்களில் இடம்பெற்ற விசேட அபிஷேக ஆராதனைகளில்மக்கள் பெருமளவில் கலந்துகொண்டனர். மக்கள் புத்தாண்டு நல்வாழ்த்துக்களைப் பரிமாறிக்கொண்டனர்.

## வாய்க்காலில் வீழ்ந்தவரின் இரண்டுகைகளும் முறிந்தன

(யாழ்ப்பாணம்)

கடிதங்களுடன் சென்ற ஒருவர் வாய்க்காலுக்குள் வீழ்ந்து இரண்டு கைகளையும் முறித்துக் கொண்டார். இச் சம்பவம் நேற்றுக் காலை பத்துமணியளவில் யாழ்ப்பாண கோட்டையின் அருகே உள்ள கழிவுநீர் வாய்க்காலில் இடம் பெற்றது.

எஸ், எஸ் செல்வநாயகம் என்ற இந்த நபர் திருமறைக் கலாமன்றத்தைச் சேர்ந்தவராவார். (லோ

## வரிவிளம்பரம்

### தேவை

பாவித்த சம்போ, ஓடிக்கொலோன், Gum (கம்) Vicks போத்தல், டவுடர் டப்பா, போல்பொயின்ட் பேனா, சனிக்கிழமைகளில் மட்டும் காலை 9.00 மணிமுதல் 12 00 மணிவரை வாங்கப்படும். எஸ் சத்தியன், 55, மணிக்கூட்டு வீதி. கொழும்பு ஸ்ரூடியோ பின்புறம் யாழ்ப்பாணம். (B-2169)

### பழைய புத்தக விற்பனை நிலையம்

பழைய புத்தகங்கள், கொப்பிகள் பேப்பர் போத்தல் செப்புபித்தளை கோழி இறகு பெட்டி உறைகள், உரப்பைகள் வாங்கப்படும், விற்கப்படும் சேனாதிராசா பழைய புத்தக விற்பனை நிலையம், 57ஸ்ரான்லி றோட், (இலங்கை வங்கி முன் லேன்) யாழ்ப்பாணம். (B/2301)

கரைச்சிப் பிரதேச சபை, தலைமைச் செயலகம்
கிளிநொச்சி

## மிக முக்கிய அறிவித்தல்

கரைச்சிப் பிரதேச சபையுடன் தொடர்புள்ள சகல வரியிறுப்பாளர்கள், ஒப்பந்தகாரர்கள் மின்பாவனையாளர்கள், தனிநபர்களுக்குச் செலுத்த வேண்டிய வாடகைகளை வாடகை கட்டுப்பாட்டுச்சபைச் சட்டப்படி செலுத்தியவர்கள் போன்ற சகலரும் அவதானிக்க வேண்டியதாவது:

சென்ற 1990ஆம் ஆண்டு ஆனிமாதம் 13ஆம் திகதி இரவு தொடக்கம் அரசபடையினர், போராளிகள் மோதலினால் கிளிநொச்சி பிரதேச சபைக் கட்டிடம் சகல ஆவணங்களுடனும் எரிந்தமை பற்றி ஈழநாதம் பத்திரிகை மூலம் அறிந்திருப்பீர்கள்;

தற்போது மீள செலுத்தப்பட வேண்டிய வைப்புக்கள் சம்பந்தமான தங்கள் வசமுள்ள பற்றுச்சீட்டுக்களை கரைச்சிப் பிரதேச சபையில் சமர்ப்பித்து உரிய பதிவேடுகளைப் புனரமைக்க உதவுமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்;

அதேபோன்று சோலைவரி, மின்கட்டணம் என்பன 1990ஆம் ஆண்டுக்குப் பின்பு செலுத்திய பற்றுச்சீட்டுக்களையும் சமர்ப்பித்து எமது புத்தகத்தில் பதிவுவைக்க ஆவன செய்யுங்கள் அதேபோல் பிணைப்பணங்கள் என்பவற்றின் பற்றுச்சீட்டுக்களையும் எதிர்வரும் 08-05-91க்கு முன் சமர்ப்பிக்காதவர்களின் கோரிக்கைகளை நிராகரிக்கும் நிலைக்கு உந்தப்படுவேன் என்பதையும் தெரிவிக்கின்றேன்.

'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு'

05-04-91

சு. வேலுப்பிள்ளை
விசேட ஆணையாளர்
கரைச்சி பிரதேசசபை
கிளிநொச்சி

(B = 2362)

## நினைவு கூருகின்றோம்...

### 1991- 04- 15

1986 ஆம் ஆண்டு இதேதினத்தில் வீரமரணமடைந்த

✲ **உதயன்** (ஜோர்ஜ் யோககுமார் - சாம்பல்தீவு)

1988 ஆம் ஆண்டு முக்கொம்பனில் இந்தியப் படையினரின் முற்றுகையின் போது சயனைட் உட்கொண்டு வீரமரணமடைந்த

**2ஆம் லெப். சந்திரன்** (செல்லையா தயாபரன் - பூநகரி)

இதே ஆண்டு கோணாவிலில் உள்ள எமது முகாமை இந்தியப் படையினர் சுற்றி வளைத்த போது சயனைட் உட்கொண்டு வீரமரணமடைந்த

**றெஜி** (பாஸ்கரன் அசோக்குமார் - தர்மபுரம்)

1989 ஆம் ஆண்டு தங்கவேலாயுதபுரத்தில் இந்தியப் படையினருடனான நேரடி மோதலில் வீரமரணமடைந்த

**குரு** (தர்மரத்தினம் தவேந்திரன் - தம்பிலுவில்)

**எஸ்.பி** (கந்தக்குட்டி சுந்தரராஜன் - விநாயகபுரம் திருக்கோயில்)

**வரதன்** (இராஜவேல் சிவானந்தமூர்த்தி - தம்பிலுவில்)

இதே ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா படையினர் மறைந்திருந்து தாக்கியதில் வீரமரணமடைந்த

**2ஆம் லெப். குணம்** (கணேசலிங்கம் ஜெகநாதன் - கிண்ணியா)

**2ஆம் லெப். கரன்** (வேலாயுதம் சசிகரன் - சாம்பல்தீவு)

இதே ஆண்டு இந்தியப்படையினருடனான நேரடி மோதலில் வீரமரணமடைந்த

**2ஆம் லெப். விக்ரம்** (கிருஷ்ணபிள்ளை சவுந்தரபிள்ளை - முல்லைத்தீவு)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

✲ மேற்குறிப்பிடப்பட்ட மாவீரர் உதயன் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(B 2364)

விடுதலை வரலாற்றில் வீரகாவியம் படைத்த

### அன்னை பூபதி அவர்களின் 3ஆம் ஆண்டு

# நினைவின் காணிக்கை

## = 1991 =

யாழ். வட்ட அவை
விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி
யாழ்ப்பாணம்

அன்னை பூபதி தமிழீழ மண்ணின் சுதந்திர உணர்வின் அழியாத தியாகச்சுடர்
சிற்றூர் அவை
குருநகர் கிழக்கு

தமிழீழ மண்ணின் சுதந்திர விடிவுக்காய் ஏகோபித்த உரிமைக் குரலாய் தியாகி அன்னை பூபதி விளங்குகின்றாள்
சிற்றூர் அவை
குருநகர் மேற்கு



ஈழத்தமிழர் துயர்துடைக்க இன்னுயிர் நீத்த தமிழ்த் தாயே
ஈழம் அடைந்தே திரும் வரை
ஓயாது எமது போராட்டம்
சிற்றூர் அவை
அத்தியடி

வாழ்ந்தோர் கோடி!
வாழ்வோர் கோடி!
மக்களின் மனதில் நிற்பவர் நீரே!
சிற்றூர் அவை
சுண்டிக்குளி

எமது மண்ணிலே மாபெரும் விடுதலை எழுச்சிக்கு வித்திட்டு சென்ற வீரத்தியாகி அன்னை பூபதி

சிற்றூர் அவை யாழ்நகர்மத்தி

**சிந்தனைக்கு**

ஒரு நாடு, மற்றொரு நாட்டைச் சுரண்ட அனுமதிக்கும் எந்த ஒரு பொருளாதார முறையும் ஒழுக்கம் அற்றது.

— மகாத்மா காந்தி


# ஈழநாதம்

91, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்; 15.04.1991
தொலைபேசி
ஆசிரியபீடம்; 023-2839 நிர்வாகபீடம்; 2208
த.பெ.எண் 05


## நீர்வளத்தைச் சுரண்டும் ஜான் ஓயாத்திட்டம்

அநுராதபுர மாவட்டத்திலுள்ள மூன்று குளங்களைப் புனரமைக்க ஜான் ஓயாவிற்குக் குறுக்கே அணைக்கட்டு ஒன்றைக் கட்டும் சாத்தியப்பாட்டைப் பற்றி ஆராயும்படி சிறிலங்கா ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார். சிறிலங்கா அரசாங்கத்தின் இத்தீர்மானம் தொடர்ந்தும் தமிழரின் வளங்களைச் சுரண்டும் நடவடிக்கையின் ஒரு பகுதியாகும்.

ஒருபுறம் இராணுவ நடவடிக்கையாலும், குடியேற்றத் திட்டங்களினாலும் தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்துவரும் வேளையில் மறுவளத்தில் தமிழரின் பொருளாதார நடவடிக்கைகளையும், வளங்களையும் அழிப்பதிலும், சுரண்டுவதிலும் சிறிலங்கா அரசாங்கம் தீவிர கவனம் செலுத்தி வருகின்றது.

இலங்கையில் தமிழர் தாயகம் ஒப்பீட்டு ரீதியில் வரட்சியானதாகும். வருடத்தில் சராசரியாக 2000மி மீ குறைவான மழைவீழ்ச்சியையே இப்பிரதேசம் பெறுகின்றது. அதுவும் குறிப்பிட்ட சில மாதங்களிலேயே- ஒக்டோபர், நவம்பர், டிசம்பர்-பெரும்பகுதி கிடைக்கப் பெறுகின்றது.

மேலும், தமிழர் தாயகம் பல ஆற்று வடிநிலங்களைக் கொண்டிருப்பினும் அவற்றின் பெரும்பாலானவை ஜீவநதிகளாக இல்லை. சில நதிகள் மட்டுமே ஜீவநதிகளாகும். மிகுதி நதிகள் மழைபெறும் பருவகாலத்தில மட்டுமே நீரைக் கொண்டவையாக இருக்கின்றன. இருப்பினும் மழைப் பருவத்தை அடுத்துவரும் மாதங்களின் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்கு இவற்றின் பங்கு முக்கியமானதாகும்.

இந்நிலையில், நதிகளுக்கு குறுக்காக அணைகளைக் கட்டுதல், நதிகளைத் திசை திருப்புதல் ஆகிய நடவடிக்கைகள் என்பன தமிழர் தாயகத்தின் நீர்வளத்தை திட்டமிட்டுச் சுரண்டும் ஒரு நடவடிக்கையாகும். இந்நடவடிக்கையின் மூலம் தமிழரின் விவசாய நிலங்கள் தரிசு நிலங்களாகப் போகும்நிலை உருவாகிவிடும். இது தமிழரின் பொருளாதார நடவடிக்கைகளைத் திட்டமிட்டு அழித்துவிடக் கூடியதாகும்.

தமிழர் தாயகத்தில் ஓடும் நதிகளில் மகாவலி கங்கை, கல்லோயா போன்ற ஒரு சிலதே ஜீவநதிகளாகும். ஆனால், அவற்றின் குறுக்காக எழுப்பப்பட்ட அணைக்கட்டுகளும், திசைதிருப்பும் திட்டங்களும் தமிழர் தாயகத்தை பெருமளவில் பாதித்துள்ளன. இத்திட்டங்கள் ஒரு புறத்தில் தமிழர் தாயகத்தில் சிங்களக் குடியேற்றங்களுக்கு வித்திட்டுள்ளன. அதேவேளை தமிழரின் பிரதான பொருளாதார நடவடிக்கையான விவசாய நடவடிக்கைகளையும் அழித்து விடுபவையாகவுள்ளன. மகாவலி கங்கை திசை திருப்புத் திட்டத்திற்கு முன்பாக மகாவலி ஆற்றுக் கழிமுகப் பகுதிகளில் தமிழர்களினால் மூன்றுபோகங்கள் மேற்கொள்ளப்பட்டுவந்தநெற்செய்கை நடவடிக்கைகள் தற்பொழுது பெரும் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளது. இப்பகுதிகளில் தறபொழுது ஒரு போக பயிர்ச்செய்கை அதுவும் ''வானம் பார்த்தே'' மேற்கொள்ளவேண்டிய நிலை உருவாகியுள்ளது.

இவ்வளச் சுரண்டலானதுஇந்தியாவிற்கும் பங்களாதேசிற்கும் இடையில் உள்ள கங்கை பிரமபுத்திரா நதிகளின் நீர் பங்கீடு குறித்த விவகாரத்தையும், இந்தியாவினுள் கர்நாடக மாநிலத்திற்கும், தமிழ்நாடு மாநிலத்திற்கும் இடையில் உள்ள காவேரி நீர் பங்கீடு குறித்த பிரச்சினையையும் ஒத்ததாகும்.

இவற்றைப் போன்றதே ஜான் ஓயாவில் சிறிலங்கா அரசாங்கம் மேற்கொள்ளவுள்ள அணைக்கட்டுத் திட்டமும் ஆகும். கல் ஓயா, மகாவலி வரிசையில் இன்று ஜான் ஓயாவும் இணைக்கப்படவுள்ளது. ஜான் ஓயா ஒரு ஜீவநதியாக இல்லாவிட்டாலும் பருவகாலப்பயிர் செய்கைக்கு நீரைவழங்கிவந்த ஒரு நதியாகும்.

சிறிலங்கா அரசாங்கத்தின் இச்செயற்பாடுகள் தொடர்ந்துவரும் அதன் ஆக்கிரமிப்பினதும் சுரண்டலினதும் வெளிப்பாடாகும். சிறிலங்கா அரசாங்கம் எப்பொழுதும் தமிழர் தேசிய இனப்பிரச்சினைக்கு ஒரு சமாதானத் தீர்வை நாடி நிற்கவில்லை என்பதையே இந்த நடவடிக்கை காட்டுகின்றது. இந்தநிலையில் தமிழர் தமது மண்ணையும், வளங்களையும் பாதுகாக்க இறுதிவரை போராடுவதைத் தவிர வேறுவழியில்லை.

## ஹிபோகிரிட்டிஸ் அறிமுகப்படுத்திய ஆங்கில மருத்துவ துறைக்கு தமிழ் மருத்துவதுறை சளைத்ததல்ல

தமிழ் மருத்துவத்துறையில் நாலாயிரத்தி நானூற்றி நாற்பத்தெட்டு வியாதிகள் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அவற்றில் கண்ணில் மட்டும் கண்ணுடன் சம்பந்தப்பட்ட தொண்ணூற்றெட்டு வியாதிகள் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ் மருத்துவத்துறை பற்றிய நூல்கள் சமஸ்கிருதத்திலும் தமிழிலும் காணப்படுகின்றன. தமிழ் நூல்கள் பல செய்யுள் வடிவில் காணப்படுகின்றன இன்று அவை தேடுவாரற்ற நிலையில் அழிந்தொன்று இல்லாதொன்றாக ஒழுங்கின்றி உள்ளன.

மருத்துவ அறிவும், தமிழ் மொழி அறிவும் சமஸ்கிருத அறிவும் கொண்ட அறிஞர்கள் இவற்றை மொழிபெயர்த்து தொகுத்தல் நமக்குப்பயனுள்ளதாகவும், பலவழிகளிலும் உதவுவதாகவும் அமையும். இவ்வாறு நேற்றைய தினம் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் பேராசிரியர் செல்வநாயகம் நினைவாக நடைபெற்ற ''பாரம்பரிய மருத்துவம்'' பற்றிய கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றிய கலாநிதி பா. இலட்சுமணர் அவர்கள் குறிப்பிட்டார்.

கலாநிதி சிவகடாட்சம்

அவர் மேலும் பேசுகையில் ஹிபோகிரிட்டிஸ் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட ஆங்கில மருத்துவத் துறைக்கு நமது தமிழ் மருத்துவத்துறை சளைத்தது அல்ல என்றும் எத்தனையோ அருமையான சிறந்த மருத்துவ தத்துவங்களும் மருத்துவ முறைகளும் நமது மருத்துவத்துறையில் காணப்படுகின்றன எனவும் குறிப்பிட்டார்.

### ஆசிரியர் பயிற்சிக்கான விண்ணப்பங்கள்

(கொழும்பு)

தொலைக்கல்வி மூலம் ஆசிரியப்பயிற்சிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. தற்போது கடமை புரிகின்ற பாடசாலைகளிலிருந்தே இப்பயிற்சியைப் பெற முடியும்.

கணிதம், விஞ்ஞானம் ஆகிய கற்கை நெறிகளுக்கே தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. மார்ச் 22 ஆம் திகதி வர்த்தமானியில் இதற்கான அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

### இந்திய சாரங்கள் பாணந்துறையில் பிடிபட்டன

(கொழும்பு)

தமிழ்நாட்டிலிருந்து கடத்தி வரப்பட்டதாகக் கருதப்படும் சுமார் ரூபா 20 இலட்சம் பெறுமதியான இந்திய சாரங்களை பாணந்துறைப் பொலிசார் கைப்பற்றினர். வருடப் பிறப்பு வியாபாரத்துக்காகவே சாரங்கள் கடத்தி வரப்பட்டதாகப் பொலிஸ் வட்டாரங்கள் கருதுகின்றன.

சாரங்கள் இயந்திரப்படகுகளில் பாணந்துறைக் கடற்கரையில் இறக்கப்பட்டன என்று பொலிசார் தெரிவித்தனர்.

### வீட்டுத் தோட்டப் போட்டி நடாத்தத் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண சமநலசேவைத் திணைக்களம் வீட்டுத் தோட்டப்போட்டியை நடாத்தத்தீர்மானித்துள்ளது. கமநல சேவைகள் மட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும் இப்போட்டிகள் நடைபெறும்.

கமநல சேவைகள் மட்டத்தில் போட்டியில் 1ஆம், 2-ம், 3-ம், இடங்களுக்கு முறையே ரூபா ஆயிரம், எழுநூற்றி ஐம்பது ஐந்நூறு, ரொக்கப்பணம் வழங்கப்படும்.

மாவட்டப் போட்டியில் தெரிவு செய்யப்படுபவர்களுக்கு ரூபா மூவாயிரம், இரண்டாயிரத்துஐந்நூறு, ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

### தையற் பயிற்சி நிலையம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

ஓட்டுமடம் கலைவாணி சனசமூக நிலையத்தினர், முறைசாராக் கல்வி நிலையத்தின் அனுசரணையுடன், தையற் பயிற்சி நிலையம் ஒன்றினை ஆரம்பிக்கவுள்ளனர். இப் பயிற்சி நிலையத்தை, மின்வைத் தெழிலதிபர் திரு. க. கனகராசா இன்று காலை பத்து மணியளவில் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

### கிரிக்கெட் போட்டி

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய விற்பனை முகவர்களுக்கும், இலங்கை வர்த்தக வங்கியின் விளையாட்டுக் கழகத்தினருக்கும் இடையிலான சிநேகபூர்வ கிரிக்கட் போட்டியொன்று சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இன்று பதினைந்தாம் திகதி காலை ஒன்பது மணியளவில் இப்போட்டி ஆரம்பிக்கப்படும்.

### பரீட்சை நிலையத்தில் கொடி பறக்க வேண்டுமாம்

(கொழும்பு)

வடக்கு, கிழக்கிலங்கை, பொது (உயர்தரப்) பரீட்சை நடைபெறும் நிலையங்களில் கொடிகள் பறக்க விடப்படவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 23ம் திகதி முதல் 14ம் திகதி வரை விசேட உயர்தரப் பரீட்சை நடைபெறும் காலங்களில் இராணுவ நடவடிக்கை இடம்பெறலாம்.

சிறிலங்கா விமானப்படை பரீட்சை நிலையங்களை இனங்கண்டறிந்து கொள்ளவே கொடிகள்பறக்கவிடவேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது.

கைதடி சித்தவைத்திய மாணவர்

### மதிப்பீட்டுப் படிவங்கள் தனிச்சிங்களத்தில்

(கைதடி)

கைதடி ஆயுர்வேதப் போதனாவைத்தியசாலையில் சித்தவைத்தியமாணவர் மதிப்பீட்டுப் படிவங்கள் சிங்கள மொழியில் வழங்கப்படுகின்றன. தமக்குத் தெரியாத மொழியில் படிவங்கள் வழங்கப்படுவதை மாணவர் ஆட்சேபித்துள்ளனர்.

இப்படிவங்கள் மாணவர் கற்கை தொடர்பான தொடர் மதிப்பீட்டுப் படிவங்களாகும். மாதந்தோறும் மாணவர் முன்னேற்றம் தொடர்பான இந்தப் படிவத்தை மாணவர்களே நிரப்பவேண்டும் என்று போதனா வைத்தியசாலை நிர்வாகம் எதிர்பார்க்கிறது. இறுதியில் ஆயுர்வேதப் போதனா வைத்திய சாலைப் பொறுப்பதிகாரியின் ஒப்பத்துடன் இப்படிவங்கள் மாதாமாதம் கொழும்பு ஆயுர்வேத ஆணையாளருக்கு அனுப்பப்படுகின்றன.

படிவங்களுக்கான மொழிபெயர்ப்பை மாணவர்கள் கோரியபோதிலும் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி இது பற்றி இன்றுவரை கவனமெடுக்கவில்லை என்று மாணவர்கள் தரப்பில் சொல்லப்படுகிறது.

### அகதிகளுக்கு உணவுப்பொருள் விநியோகம்

(மாதகல்)

மாதகல் சென் மேரிஸ் சனசமூக நிலையத்தினர் வலிவடக்கு, காரைநகர் பகுதிகளிலிருந்து அகதிகளாக வந்து சென்மேரிஸ், சென் அன்ரனிஸ் பாடசாலைகளில், ஆலயங்களில் தஞ்சமடைந்துள்ள மக்களுக்கு உணவுப் பொருள்கள் பலவகைகளை வழங்கி வருகின்றனர்.

இவர்கள் தமிழர் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்திடம் இருந்தே மேற்படி உணவுப் பொருள்களைப்பெற்று அகதிகளுக்குவழங்கி வருகின்றனர்.

### சக்கர நாற்காலி அன்பளிப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலைக்குப் பருத்தித்துறை பூதராயர் வீதியைச்சேர்ந்த வடிவேல் வெற்றிவேல் குடும்பத்தினர் நோயாளர்களைத் தள்ளிச் செல்லும் சக்கர நாற்காலி ஒன்றை அன்பளிப்புச் செய்துள்ளனர். வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ் கதிரவேற்பிள்ளை டாக்டர் கே. மயில்வாகனம் பெருமாள் ஆகியோரிடம் இச்சக்கர நாற்காலி கையளிக்கப்பட்டது. வைத்தியசாலை நோயாளர்களின் நலன்களைக் கருத்திற் கொண்டு இச்சக்கர நாற்காலியை அன்பளிப்புச் செய்த குடும்பத்திற்கு வைத்தியசாலை நிர்வாகம் நன்றி தெரிவித்துள்ளது. (25)

### சுகாதாரச் சீர்கேடு

(ஈச்சமோட்டை)

பூநகரி ஆலடிச் சந்தியில் இருக்கும் தேநீர்க்கடைகள் அனைத்தும் சுகாதாரமற்ற நிலையில் காணமுடிகிறது.

இக்கடைகளில் தேநீர் குடிக்கச்செல்லும் மக்களை ஈக்கள் மொய்த்து தொல்லை கொடுக்கின்றன. (43)

# குர்திஷ் அகதிகளைப் பராமரிக்க ஈரான், துருக்கி உதவிகோருகின்றன

(அங்காரா)

துருக்கி எல்லைகளில் சிக்கியுள்ள குர்திஷ் இன அகதிகளுக்கு உணவும், உறைவிடமும் வழங்க 40 லட்சம் அமெரிக்க டாலர் சர்வதேச உதவி தேவைப்படும் என்று துருக்கி கூறுகிறது. இதே வேளை ஈராக்கில் இருந்து இடம் பெயர்ந்து பெருமளவில் வரும் அகதிகளுக்கு நேரடியாக உதவி வழங்குமாறு சர்வதேச சமுதாயத்திடம் ஈரான் கேட்டுள்ளது.

அகதிகளாக சிக்கித் தவிக்கும் குர்திஷ் அகதிகளுக்கு ஓரளவுதான் உணவுப்பொருள்கள் போய்ச் சேர்ந்திருப்பதாக ஈரானிய அதிகாரிகள் கூறுகிறார்கள். எல்லைக்கப்பால் சுமார் ஒரு லட்சம் அகதிகள் சிக்கித் தவிப்பதாகவும் ஈரானிய அதிகாரிகள் சுட்டிக் காட்டுகிறார்கள்.

ஈரானிலும், துருக்கியிலும் சிக்கியுள்ள குர்திஷ் அகதிகளுக்கும் பொருளாதார மற்றும் வேறு உதவிகள் வழங்க பல நாடுகள் முடிவு செய்துள்ளன. வடக்கு ஈராக்கில் குர்திஷ் அகதிகளுக்கு உதவிட பதினெட்டரைக் கோடி டாலர் உதவி வழங்கப் போவதாக ஐரோப்பிய சமுதாயம் அறிவித்துள்ளது. மூன்று லட்சம் அமெரிக்க டாலர் உதவி வழங்கப் போவதாக தென் கொரியா முன்வந்துள்ளது.

குர்திஷ் அகதிகளுக்கு உதவும் சர்வதேச மனிதநேய ஸ்தாபன அதிகாரிகளுக்கு உதவிட 3500 அமெரிக்கப் படைகளை அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் அனுப்பியுள்ளார்.

## டாக்காவின் பத்திரிகையாளர் ஒரு நாள் வேலை நிறுத்தம்

(டாக்கா)

பங்களாதேசில் நேற்றுமுன் தினம் பத்திரிகையாளர் மேற்கொண்ட 24 மணிநேர வேலை நிறுத்தத்தினால் டாக்காவில் எல்லாப் பத்திரிகை நிறுவனங்களிலும் வேலைகள் தடைப்பட்டன. பத்திரிகைச் சொந்தக்காரர் பத்திரிகையாளரிடம் மோசமாக நடந்து கொண்ட குற்றச்சாட்டுக்காக அவருக்குத் தண்டனை வழங்குமாறு கோரி டாக்கா பத்திரிகையாளர் சங்கம் வேலை நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்திருந்தது. இந்த அழைப்பை ஏற்றுப் பத்திரிகையாளர் வேலை நிறுத்தத்தை மேற்கொண்டனர்.

## முடிச்சு மாறிகள் தொல்லை அதிகரிப்பு

முத்திரைச் சந்தையில் முடிச்சு மாறிகளின் தொல்லை தற்போது அதிகரித்து வருகிறது.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு கொழும்பிலிருந்து பஸ்வண்டியில் முத்திரைச்சந்திக்கு வந்து சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவரின் பிரயாணப்பை முடிச்சு மாறிகளினால் களவாடப்பட்டுள்ளது. இதுபோன்ற சம்பவங்கள் தற்போது அதிகரித்து வருவதால் பிரயாணிகள் மிகவும் அவதானமாக இருக்குமாறு போக்குவரத்துப் பிரிவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## கவசப்படை ஒன்று விலகியது

(பாக்தாத்)

ஈராக்கிலிருந்து 17,000 துருப்புக்களைக் கொண்ட கவசப்பிரிவு ஒன்றினை அமெரிக்கா நேற்று விலக்கிக்கொண்டது.

வளைகுடாப் பகுதியில் இப்போதுள்ள அமெரிக்கத் துருப்புக்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சம் ஆகும். பெப்ரவரி 28 ஆம் திகதி முடிவுற்ற வளைகுடாப் போரின் முடிவில் 5,40,000 அமெரிக்கத் துருப்புக்கள் அங்கு இருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

## குர்திஷ் மக்களை நாடுதிரும்ப சதாம் கோரிக்கை

(பக்தாத்)

கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்களைத் தவிர ஏனையோருக்கு எவ்வித தண்டனையும் வழங்கப்படமாட்டாது என ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைன் அறிவித்துள்ளார். வட ஈராக் பகுதியிலிருந்து தத்தம் வீடுவாசல்களை விட்டு வெளியேறி ஈரான், துருக்கி நாடுகளுக்குள் பிரவேசித்துள்ள சுமார் பத்து லட்சம் பேரும் அச்சமின்றி நாடு திரும்புமாறு ஜனாதிபதி சதாம் ஹுசைன் வேண்டுகோள் ஒன்றையும் விடுத்துள்ளார்.

மாவீரர் இலட்சியம்

## 95 தொகுதிக்கு அ.தி.மு.கழகம் வேட்பாளர் பட்டியல் வெளியீடு

(சென்னை)

அனைத்து இந்திய அ.தி.மு. கழகம் 95 தொகுதிகளுக்கான வேட்பாளர் பட்டியலை வெளியிட்டுள்ளது. எஞ்சிய பேரவைத் தொகுதிகளுக்கும், லோக்சபைத் தொகுதிகளுக்குமான வேட்பாளர் பட்டியல் இம்மாதம் 18 ஆம் திகதி வெளியிடப்படும் என்று செல்வி ஜெயலலிதா நேற்றுச் சென்னையில் தெரிவித்தார்.

இதன் பொதுச்செயலாளர் செல்வி ஜெயலலிதா பெரியார் மாவட்டத்தில் காங்கேயம் தொகுதியிலிருந்து போட்டியிடுவார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# என்று நிறைவுறுகின்றதோ அன்றே அமைதி வரும் -ராஜன்

(யாழ்ப்பாணம்)

இந்த மண்ணில் எவ்வாறு ஒரு கோடைகாலம், ஒரு மாரிகாலம் என மாறி மாறி காலநிலை வருகின்றதோ அது போலவே இந்த மண்ணில் பேச்சுவார்த்தைகளும், யுத்த நிறுத்தங்களும், யுத்தங்களும் வரும். ஆனால் எமது மண்ணின் எல்லைகளில் என்று துப்பாக்கி வேலிகள் அமைத்து நிற்கின்றோமோ, என்று இந்த மண்ணிற்காக உயிர் நீத்த போராளிகளின் இலட்சியம் நிறைவேறுகின்றதோ அன்றுதான் ஒரு உண்மை அமைதி நிலவும் என யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் ராஜன் கூறியுள்ளார்.

1989 ஆம் ஆண்டு இதே தினத்தில் சந்தைமடம் ஆலடிச் சந்தியில் இடம்பெற்ற வெடிவிபத்தில் வீரமரணமடைந்த போராளிகள், பொதுமக்கள் ஞாபகமாக நினைவுத் தூபி திறந்துவைக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே திரு. ராஜன் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் இந்தக் கூட்டத்தில் விடுதலைப்புலிகள் பிரமுகர் ஜவான், அஞ்சநேயர், மகளிர் முன்னணியைச் சேர்ந்த மாலினி, பாலன் ஆகியோருடன் மக்கள் சார்பாக யாழ் இந்துவின் முன்னாள் பிரதி அதிபர் சிவராசலிங்கம் அவர்களும் உரையாற்றினர். இந்த நினைவுத்தூபியை யாழ். மாவட்ட துணைத் தளபதி திரு. பைப் அவர்கள் திறந்து வைத்தார். (லே)

## சட்டப் பேரவைத் தேர்தலில் கருணாநிதி போட்டியிடார்?

(சென்னை)

சட்டப்பேரவைத் தேர்தலில் தி.மு.க தலைவர் மு. கருணாநிதி போட்டியிடுவாரா இல்லையா என்பது பற்றி இன்னும் இரண்டொரு நாட்களில் தெரியவரும்.

போட்டியிடப் போவதில்லை என்று அவர் முன்னர் அறிவித்ததின் பேரிலேயே இன்று அது பற்றி மீண்டும் கேட்கப்பட்டது. அதற்கு அவர் பதிலளிக்கையில், அப்படி ஒரு யோசனை தமக்கு இருக்கிறதென்றும் தேர்தலில் நிற்காமல் தமிழ் நாடு முழுவதும் தேர்தல் பிரசாரம் செய்யலாம் என்றுதாம் கருதுவதாகவும். இதுபற்றித் தமது சகாக்களுடன் கலந்து முடிவெடுக்கப்படும் என்றும் கருணாநிதி நேற்றுச் சென்னையில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். தி.மு.க. வேட்பாளர் பட்டியல் இன்னும் ஓரிரு தினங்களில் வெளி வரும் என்றும் தெரிவித்தார். தோழமைக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தையில் தாமதம் ஏற்பட்டதால் வேட்பாளர் பட்டியல் வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதென்றார். தேர்தல் அறிக்கை தயாரிக்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

## குர்திஷ் அகதிகளுக்கு பெரியளவு அமெரிக்கா உதவி

(வாஷிங்டன்)

குர்திஷ் அகதிகளுக்கு பெருமளவில் உதவுவதற்கு அமெரிக்கா முன்வந்துள்ளது. அமெரிக்கா தலைமையில் வழங்கப்படும் இந்த நிவாரணப் பணியில் ஈராக் தலையிட்டால் அதை அமெரிக்கா பொறுத்துக் கொள்ளாது. இவ்வாறு தெரிவித்த அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் ஈராக் உள்விவகாரத்தில் தான் தலையிட விரும்பவில்லை என்றும், ஆனால் நிவாரணப் பணியில் ஈடுபடும் ஒரு இராணுவ வீரன் பாதிக்கப்பட்டாலும் சும்மா விடப்போவதில்லை என்றும் கூறியுள்ளார்.

## மண்டல் கமிசன் சிபார்சுகள் அமுல் செய்யப்படும்

— ஜனதாதள தேர்தல் அறிக்கை

தேசிய ஒற்றுமை, சமுதாய நீதி மதச்சார்பின்மை கூட்டாட்சிமுறை, தற்காப்பு ஆகிய குறிக்கோள்களுடன் நாட்டின் நிலையான ஆட்சியை தேசிய முன்னணி உறுதி கொண்டிருப்பதாக நேற்று டில்லியில் வெளியான அதன் தேர்தல் அறிக்கை கூறுகிறது.

தேசிய முன்னணியின் தேர்தல் அறிக்கை பிற்பட்ட வகுப்பினருக்கான வேலைவாய்ப்புகள் குறித்து மண்டல் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை முழுமையாகச் செயற்படுத்த உறுதி பூண்டிருப்பதையும் வலியுறுத்துகிறது. மண்டல் ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் குறைபாடுகளிருந்தால் அதனைத் திருத்தி அமைக்க நிபுணர்குழு ஒன்று அமைக்கப்படும் என்றும் அந்த அறிக்கை கூறுகிறது.

மண்டல் குழுபரிந்துரைகளிலோ வேறு ஒதுக்கல் திட்டங்களிலோ இல்லாது இருந்தாலும் பொருளாதார வகையில் பின்தங்கியவர்களுக்கு 5 முதல் 10 விகிதமான வேலைவாய்ப்புகள் ஒதுக்கப்படும் என்றும் தேர்தல் அறிக்கை கூறுகிறது.

## தலைமை தேர்தல் கமிஷனர் பதவி விலகக் கோரிக்கை

தலைமைத் தேர்தல் கமிஷனர் திரு. டி. என். சேஷன் தனது பதவியிலிருந்து விலக வேண்டுமென பாரதிய ஜனதா கட்சி கோரிக்கை விடுத்துள்ளது. தேர்தல் கமிஷனுக்கும் அரசியல் கட்சிகளுக்குமிடையேயான பிரச்சினைகளில் மூன்றாவது தரப்பினர் தலையிடுவதை அனுமதிக்கும் வகையில் தேர்தல் கமிஷன் கூறியிருப்பதைக் கண்டித்தே பாரதிய ஜனதாக் கட்சி மேற்கண்ட கோரிக்கையை விடுத்துள்ளது.

பாரதீய ஜனதாக் கட்சியின் இக்கோரிக்கை நீதி மன்றத்தை அவமதிக்கும் செயலுக்கு ஒப்பானது என்று மத்திய சட்டத்துறை அமைச்சர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி கருத்து வெளியிட்டுள்ளார்.

## பாலஸ்தீனியருக்கு 'சுயாட்சி' இஸ்ரேலின் புதிய 'திட்டம்'

(டெல் அவிவ்)

இஸ்ரேலியப் பிரதமர் சமீர் பலஸ்தீன மக்களுக்குச் சுயாட்சி வழங்கும் திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளார். இத்திட்டப்படி கல்வி, நிதி, வர்த்தகம், நீதி, சுகாதாரம் ஆகிய அமைச்சுக்கள் பலஸ்தீனியர்களுக்கு வழங்கப்படும். ஆனால் பாதுகாப்பும், வெளியுறவு அமைச்சுகள் இஸ்ரேலிய அரசின் வசமிருக்கும். அல் ஹெமின்யா என்ற பத்திரிகைக்கு வழங்கிய பேட்டி ஒன்றின் போது இஸ்ரேலியப் பிரதமர் சமீர் இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

இஸ்ரேலிய அமைச்சர்களுக்குச் சரிநிகர் சமானமானவர்களாகவே பலஸ்தீனிய அமைச்சர்களும் செயலாற்றுவார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பலஸ்தீனியர் தமது பொலிஸ் படையைத் தாமே நியமிக்கலாம். ஆனால் பாதுகாப்புப் படைகள் டெல் அவிவ்வின் கட்டுப்பாட்டில் இயங்கும் சமீர் தனது பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஏற்பாடு சம்டேவிட் ஒப்பந்தத்தைவிட அதிகமானது, இறைமைக்குச் சற்றுக் குறைவானதும் என்று அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள்.

## தலாய்லாமாவிற்கு அம்பேத்கார்சர்வதேசவிருது

(டில்லி)

திபெத்திய ஆன்மீகத் தலைவர் தலாய்லாமாவிற்கு மனித சமுதாயத்திற்கு ஆற்றியசிறந்த பணிக்காக டாக்டர் அம்பேத்கார் சர்வதேச விருது வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

டாக்டர் அம்பேத்காரின் நூற்றாண்டு விழாவையொட்டி புதுடில்லி பாரதீய லலித் சாகித்திய அக்கடமி இந்த விருதினை தலாய்லாமாவிற்கு வழங்கப் போவதாக தெரிவித்தது.

இதுதவிர முன்னாள் நீதிபதி வி. ஆர். கிருஷ்ணஐயர் உட்பட பத்து பிரமுகர்களுக்கு டாக்டர் அம்பேத்கார் தேசிய விருதுகள் வழங்கப்படவுள்ளன.

## குழந்தை

குழந்தைகள் இல்லாத ஐரோப்பியத் தம்பதிகளுக்கு ஒரு லட்சம் ரூபா வரையில் பெற்றுக் கொண்டு விற்றுவிடுகிறார்கள்.

சமீபகாலங்களில் இவ்வாறான நடவடிக்கைகள் அதிகரித்து வந்ததையடுத்தே பாராளுமன்றத்தில் குழந்தைகளைத் தத்தெடுப்பதற்கான சட்டமூலம் திருத்தியமைக்கப் படவுள்ளது என்று அந்த அதிகாரி கூறினார்.

## ஜனதாதள கூட்டமாக மாறிய அம்பேத்கார் பிறந்தநாள் விழா

(டில்லி)

ஜனக் கூட்டத்தால் புதுடில்லிநகரம் நிரம்பியது. டாக்டர் அம்பேத்காரின் நூறாவது பிறந்தநாளை முன்னிட்டு தேசிய முன்னணி ஏற்பாடு செய்த பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் சுமார் ஐந்து லட்சத்திற்கும் அதிகமான மக்கள் திரண்டிருந்தனர். ஏறத்தாழ தேசிய முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் போல அமைந்த இப்பொதுக்கூட்டத்தில் நேற்று மாலை தேசிய முன்னணியின் முக்கிய தலைவர்கள் உரையாற்ற இருந்தனர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது